நாள்.04.07.2023

**அசல் வழக்கு எண். 9/2018**

**<u>வா.சா.1 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனது மனைவி வழக்கு போட்டிருக்கும் வழக்கு புல எண் 316/1-கு வடபுறம் உள்ள புல எண் சொல்ல முடியுமா என்றால் புல எண்.317/6 ஆகும். மேற்படி புல எண்.317/6 என்பது எதிர்வாதிகளுக்கு சொந்தமான சொத்து என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் , நிலஅளவையருடன் தாவா சொத்தை அளந்து தாக்கல் செய்துள்ள அறிக்கையில் செப்டிக்டேக் புல எண்.317/6 ல் அமைந்துள்ளது என சொல்லியுள்ளார் என்றால் அதை நான் ஒத்துக்கொள்ளவில்லை. வழக்கு புல எண் யாருக்கு பூர்வீகமாக சொந்தமானது என்றால் அபுல்கஷன் மரைக்காயர் என்பவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது. வழக்கு சொத்து அபுல்கஷன் மரைக்காயருக்கு சொந்தமான சொத்து இல்லை என்றும், S.M.S.சேக்ஜலாலுதின் என்பவரால் பிள்ளையார் கோவில் தெருவை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி ஐயர் மகன் சாமிநாதன் சர்மா என்பவரிடமிருந்து கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தாவினால் எனது தந்தை பெயரில் வாங்கப்பட்டது. பி.வா.ஆ.1 ஆவணத்தின்படி வடபுறம் நான்கெல்லையில் எதிர்வாதிகளுக்கு கிரையம் கொடுத்த நபர்களின் பெயர்தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தை எனது மனைவிக்கு 1990 ல் அவரது தாயார் பாத்திமா அம்மாள் ஹீ பா கொடுக்கப்பட்டது என்பதுதான் எனது கட்சி. வழக்கு சொத்திற்கு நாளது தேதிவரை எனது மனைவி பெயருக்கு வருவாய்துறையில் பட்டா வாங்கவில்லை என்று சொன்னால் சுற்றி காமொண்ட் சுவர் உள்ளதால் வாங்கவில்லை. தற்சமயம் புல எண் 316/1 என்பது வருவாய் ஆவணங்களின் படி 316/1 ஏ, 316/1 பி, 316/1 சி, 316/1 டி, 316/1 இ என உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்லும் வழக்கு சொத்து 20 செண்ட் மேற்சொன்ன எந்த உட்பிரிவில் வருகிறது என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன உட்பிரிவுகள் அனைத்திற்கும் அபுல்கஷன் என்பவர் பெயரில் பட்டா உள்ளது என்றால் தவறுதலாக பட்டா வாங்கியுள்ளார். அதனால் எனது மனைவி பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ எண்.3/2010 என்ற வழக்கு தற்சமயம் வரை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. வழக்கு புல எண் சொத்து என் மனைவிக்கு சொந்தமான சொத்து என்பதை காட்டுவதற்கு எந்தவித

ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா வழக்கு புல எண்ணின் வடபுறத்தில் எதிர்வாதிகளுக்கு சொந்தமான புல எண் 317/6 ல்தான் அவர்களுக்கு சொந்தமான வீடும் நான் எனது வழக்குரையில் சொல்லும் செப்டிக்டேங்கும் அமைந்துள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் அவர்களுக்கு சொந்தமான புல எண்ணில் ஏற்கனவே இருந்த பழைய சிறிய செப்டிக்டேங்கை பெரிதாக கட்டுவதற்காக ஏற்பாடு செய்துக்கொண்டிருக்கும்போது பொய்யான சங்கதிகளை கொண்டு புல எண் 316/1 ல் செப்டிக்டேங் எதிர்வாதிகள் கட்டுவதாக கண்டு எதிர்வாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பெரிய செப்டிக்டேங் கட்டி முடிக்கப்பட்டு எதிர்வாதிகள் உபயோகத்தில் இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல. வழக்கு புல எண் 316/1-யை பொறுத்து என் மனைவிக்கும், அபுல்கஷனும் உரிமை சம்பந்தமான வழக்கு பட்டுக்கோட்டை சார்பு நீதிமன்றத்தில் அ.வ எண்.3/2010 என்ற வழக்கு நிலுவையில் உள்ளதாக எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி அபுல்கஷனையும் அசல் வழக்கில் ஒரு தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் என்று சொன்னால் அவருக்கு உரிமை இல்லாத சொத்து என்பதால் அவரை நான் தரப்பினராக சேர்க்கவேண்டிய அவசியமில்லை. வழக்குரையின் சொத்துவிபரத்தில் சொல்லப்பட்டுள்ள புல எண் 316/1 ல் எதிர்வாதிகள் எந்தவித கட்டுமானங்களும் கட்டவில்லை என்பதால் எதிர்வாதிகள் மீது நான் தாக்கல் செய்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கேட்டுள்ளது சரியல்ல என்று சொன்னால் அது தவறு. எனது வழக்கு தள்ளுபடி செய்யகூடியது என்றும், எதிர்வாதிகளுக்கு செலவு தொகை கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran, B.A., B.L.,

District Munsif, Pattukkottai.